**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**
**அசல் வழக்கு எண்.** 87/2009

2019-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19-ஆம் நாள் திங்கள்கிழமை பி.வா.சா.1 (1969-ஆம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.S.நசீர், மூன்றாம் நிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிவண்ணன் | ஜாதி | : | |
| த/பெ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |

---

<u>பி.வா.சா.1-ன் முதல் விசாரணை</u>

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். தாவா சொத்து மற்றும் பூர்வீக சொத்துக்களை வாதியின் தந்தை சாமிதுரை, ஏனது தந்தை கணேசன், ராஜமாணிக்கம், செல்வராசு ஆகியோர்கள் பாகம் செய்துகொண்டு தனித்தனியாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது தந்தை இறந்தபிறகு அவரது சொத்தை நான் அனுபவம் செய்து வருகிறேன். அதனடிப்படையில் 4, 5வது இன சொத்தில் எனது பாகத்தை ராமசாமி மகன் ஜெயக்குமார் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் 4, 5 வது இன சொத்தில் சண்முகம் என்பவர் அவரது பாகத்தை மேற்படி ஜெயக்குமாருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தற்போது அவரவர்கள் பாகத்தின் அடிப்படையில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

ஒப்பம்/- திரு.எம்.பரமசிவம்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.